# சட்டவிரோத கடைத்தளங்கள் தகர்ப்பு

## டிபிகேஎல் நடவடிக்கை



கோலாலம்பூர், நவ.5-

ஜெலாத்தேக் பிபிஆர் குடியிருப்புப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த 17 கடைத்தளங்களை கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று தகர்த்தது.

ஏற்கெனவே இந்த இடத்தை காலி செய்யக் கோரி அக்கடைகளின் தரப்பினருக்கு 14 நாட்கள் நோட்டீஸ் வழங்கப்பட்டிருந்தது. ஆனாலும் கடைகள் ஜெலாத்தேக் பிபிஆர் குடியிருப்பாளர் சங்கத்துடனும் மாநகர் மன்றத் தரப்பு சந்திப்பை நடத்தியிருந்தது.

அதற்கு பிறகுதான் இந்தக் கடைகளைத் தகர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றத் தரப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது. சட்டவிரோத கடை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய இந்த தகர்க்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆனாலும் கடையை உடைப்பதற்கு மாநகர் மன்றத் தரப்பிடம் இருந்து அஸ்மி மூசா (வயது 53) எனும் வியாபாரி கூறியுள்ளார்.